# வட-கிழக்கு பிரச்னைபற்றி அரசுடன் பேச சிறிமா


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 13 இதழ் 315
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-12-1993


## விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னை பற்றிக் கலந்துரையாடுவதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குப் பிரச்னை பற்றி விரிவாகக் கலந்துரையாடுவதற்குத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும், (4ம் பக்கம் பார்க்க)

## வாகரையில் 4 தமிழர் படையினரால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் நான்கு தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி-வயது 35, ஆறுமுகம் கிளராசா-வயது25, கணபதிப் பிள்ளை சந்திரன்-வயது 20, கணபதிப்பிள்ளை நாகராசா-வயது 30 ஆகியோரே சிறிலங்காப் படையினரால் கொல் (4-ம் பக்கம் பார்க்க

# முல்லைத்தீவில் விமானத் தாக்கு

# இரு சிறுவர் உட்பட மூவர் பலி

(முல்லைத்தீவு)

**ஸ்ரீலங்கா விமானப்படையின் 'சியாமா செட்டி', 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்முடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட மூவர் உடல் சிதறிப் பலியானார்கள், ஐந்து வீடுகளும் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கட்டிடம் ஒன்றும் இதன்போது சேதமடைந்தன.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு கோட்டத்தின் அலம்பில் பகுதியில் நேற்றுக் காலை இந்த விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை 8-40 மணியளவில் இரு சியாமாசெட்டி ரக குண்டு வீச்சு விமானங்களும், புக்காரா விமானம் ஒன்றும் பல தடவைகள் மாறி மாறி குண்டுத் தாக்குதலை நடாத்தின.

இக்குண்டுத் தாக்குதலினால் அலம்பிலைச் சேர்ந்த சியாமினி கோமளா (வயது-04), சியாமினி தீபன் (வயது-12) ஆகிய இரு சிறுவர்களும், கடற்கோவில் கன்னரைச் சேர்ந்த பிரிஸா (வயது-18) என்ற இளம்பெண்ணுமே பலியானவர்களாவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரால் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை வானொலியும் நேற்றிரவு தெரிவித்தது. க-இ

## படையினர் கெடுபிடி: வன்னிபிரதேச செஞ்சிலுவை சேவைகள் நிறுத்தப்படலாம்

(வவுனியா)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மீது அரச படையினர் அடிக்கடி மேற் கொண்டுவரும் கெடுபிடிகளை யடுத்து வன்னிப்பிரதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இப்பகுதியில் தமது சேவைகளை நிறுத்திக் கொள்ளப்போவதாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சமிதியின் மேற்படி எச்சரிக்கையையடுத்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வவுனியா, மன்னார் பகுதிகளில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் (4ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்களில் பொ.ஐ. முன்னணி போட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 'பொதுசன ஐக்கிய முன்னணி' தீர்மானித்துள்ளது.

இது குறித்த அறிக்கையை, நேற்று முன்தினம் மேற்படி முன்னணியின் பொதுச் செயலர் திரு. டி. எம். ஜெயரத்ன கொழும்பில் வெளியிட்டுள் (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட 417 மாணவர்களில் 247 பேர் மாத்திரமே பதிவு செய்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 1993-94 கல்வியாண்டுக்குச் சகல பீடங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட 417 மாணவர்களில் இதுவரை 247 மாணவர்கள் மாத்திரம் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்துறைக்கு மாணவர்களில் 35 பேரும், விவசாயத்துறைக்கு 19பேரில் 5 பேரும், உயிரியல்துறைக்கு 44 பேரில் 19 பேரும், முகா (4-ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் கடும் மழை மட்டக்களப்பில் வெள்ளம்

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பல பகுதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இப்பகுதிக்குரிய இடங்களுடனான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

மன்னம்பிட்டி பகுதியில் மாத்திரம் 7 அடிக்கு மேல் வெள்ளம் பாய்வதாக அங்கிருந்து வரும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியிலுள்ள சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் உடைப்பெடுத்துள்ளதால் நீர்மட்டம் (4ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 20 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், கிளிநொச்சி மாவட்டத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து ஆலயங்கள், பாடசாலைகள், பொது இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கிளிநொச்சிப் பிரதேசச் செயலர் பிரிவில் மட்டும் 10 ஆயிரம் குடும்பங்கள் வரை வெள்ளத்தினால் அகதிகளாகி உள்ளதாகவும், இவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கத் (4ம் பக்கம் பார்க்க

## வீடு இடிந்து விழுந்து சிறுமி பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் நேற்றுவீடு ஒன்று இடிந்து விழுந்ததில் சிறுமி ஒருவர் பலியானார்.

கிளிநொச்சி புதுக்குடியிருப்பில் உள்ள வீடு ஒன்று நேற்று பிற்பகல் பெய்த கடும் மழையினால் இடிந்து விழுந்த போது இந்த வீட்டினுள் படுத்திருந்த சிவசேகரம் சிந்துஜா (வயது-5) என்ற சிறுமி பலியானதாக தெரிவிக்கப்பட்டது. (வி-இ)

## வடக்கில் இன்றும் மழை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு ஊவா மாகாணங்களில் இன்று கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இன்று மாலை இப்பகுதிகளில் மழையுடன் கடும் காற்று வீசும் அறிகுறிகளும் தென்படுவதினால் மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வி-இ)

## லயனல் மட்டு. விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமையை நேரடியாக அவதானிக்கும் பொருட்டு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ மட்டக்களப் (4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை மட்டும் வழமையான நேரத்திற்கு நடைபெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது.

## வரி விளம்பரம்

### ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர்

1994 ஆம் ஆண்டுக்கான ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் வெளிவந்துவிட்டது. நாள், திதி, யோகம், நட்சத்திரம், விடுமுறை நாட்கள், கோயில் விழாக்கள் முதலிய பல விபரங்களும் அடங்கியது. விலை ரூபா 30/- மட்டுமே. ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். (ஏ-3692)

### விற்பனைக்கு

பொக்கற் கலண்டர் 2 டிசைன் இனிமா, சாயிபாபா பொக்கற் கலண்டர், 9 டிசைன் கலண்டர்கள், டயறிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, 16, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3710)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் திரு. கு. சிறிக் தலைமையில் காரியாலய பணிமனையில் இடம்பெறும். (154)

0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் மார்கழி வெள்ளி விழா இன்று 28ம் திகதி பூரணை தினத்தன்று மாலை 6 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத்தலைவர் திரு. க. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சிறுவர் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். 154)

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணலிப்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் கோவில் மார்கழி திருவிளக்குப்பூசையும், சுமங்கலிப் பூசையும் இன்று செவ்வாய்க்கிழமை பூரணை தினத்தன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

திருவிளக்குப்பூசை, சுமங்கலிபூசையை அடுத்து அம்பாள் வீதி வலம் வந்து மெய்யடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார். (154)

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மாமன்றத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலையச் சிறுவர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். (154)

0

(யாழ்ப்பாணம்)

யாழ் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாதபீட வேதாந்த மடத்தில் ஒவ்வொரு பூரணைதினத்திலும் நடைபெறும் மார்கழி சொற்பொழிவில் இன்று செவ்வாய் பிற்பகல் 3.30மணிக்கு "திருவாசகத்தில் சிவபுராணம்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (வி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 75 வது வருடாந்த ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் 94 ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு இன்று செவ்வாய்க்கிழமை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

---

## தேவை

ஆளணித்துறை, நிர்வாக முகாமைத்துவம் ஆகிய வற்றில் அனுபவம், திறமையுள்ளவர்கள் சகல விபரங்களுடனும் 31-12-93ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: எ-3701,
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம். (எ 3701)

---

### யாழ். வர்த்தகர் சங்கம்

## முக்கிய கலந்துரையாடல்

யாழ். நகர் சகலதுறை வர்த்தக உரிமையாளர்களுக்குமான ஓர் முக்கிய கலந்துரையாடல் 29-12-93 புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்:

மாவட்ட அரசியல் துறை முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் கலந்து கொள்ளவேண்டும். தங்கள் ஸ்தாபனத்தை விட்டு வரமுடியாத வர்த்தகர்கள் ஸ்தாபனத்தை பூட்டி விட்டு வந்து பங்குபற்றல் வேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி

இங்ஙனம்
நா. த. அன்னலிங்கம்
செயலாளர்

(எ-3711)

---

வெளிவந்துவிட்டது!

பூநகரி
தொல்பொருளாய்வு

(வரலாற்றுத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் பரமு. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதிய நூல்)

ஆதிகாலத்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையுள்ள பூநகரியின் நீண்டகால வரலாற்றைத் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் விளக்குவது அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள்களின் நூற்றுக்கணக்கான நிழற்படங்களுடன் கூடியது.

விலை ரூபா 450/-

தேவைகளுக்கு:
யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க

பதிவாளர்.

(ஏ-3706)

Now available for Sale:

**A DICTIONARY ON ENVIRONMENT**

A Work which brings together scattered information on Environmental Studies

by

NAVAMANY SELVARAJAH

Associate Professor.
Department of Zoology
University of Jaffna.

Price: Rs. 160/-

Please Contact Assistant Registrar, Administration, University of Jaffna, Thirunelvely for your requirements.

Registrar.

(A-3707)

---

வெளிவந்துவிட்டது!

**மனவடு**

நெருக்கீட்டின் உளவிளைவுகளையும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளையுமிட்டு உளமருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி த. சோமசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள தமிழ் நூல் நிபுணர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படுவது.

இன்றைய சூழ்நிலையின் பாதிப்புகளைச் சிறப்பாக ஆய்ந்து விளக்குவது.

விலை ரூபா 275/-

தேவைகளுக்கு:
யாழ். பல்கலைக்கழக நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

பதிவாளர்.

(ஏ-3704)

வெளிவந்துவிட்டது!

**ஈழத்து தமிழ் நாடக அரங்கு**

நுண்கலைத்துறை பல்கலைக்கழகத்துக் கலை பண்பாட்டுப் பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் எழுதிய நூல்

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலைநாடு ஆகிய பிரதேசங்களுக்குரிய நாடக அரங்கக் கலையின் வரலாற்றைக் கூறுவது.

விலை ரூபா 120/-

தேவைகளுக்கு:
யாழ். பல்கலைக்கழக நிர்வாகக்கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்புகொள்க.

பதிவாளர்.

(ஏ-3705)

---

## நிதி கையளிக்கப்பட்டது

முன்னைநாள் தொண்டர் பயிலுனர் சங்கத் தலைவர்
திரு. செ. பரமேஸ்வரன்
தமது சங்கத்திடமிருந்த நிதியினை
புதிய தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர்
திரு. எஸ். நல்லகுமாரிடம்
24 - 11 - 93 (புதன்கிழமை)
இரு நிர்வாகசபை உறுப்பினர் முன்னிலையில் கையளித்தார்.

மேலும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்கும்வரை சகல வழிகளிலும் ஒத்துழைப்போம் என அவர் உறுதியளித்தார்.

தகவல்:
S. V. தயாநிதி
(கிரிமலை நகுலேஸ்வர ம. வி)

(கி-682)

---

### வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## 1994-ம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1994-ம் ஆண்டுக்கான ஆதனவரி, நடப்பாண்டு (1993 ம் ஆண்டு) நடைமுறையில் இருந்த அறவீட்டு வீதமே மாற்றமின்றி நடைமுறையிலிருக்கும்.

1994 ம் ஆண்டுக்கான

1-ம் காலாண்டு வரி, மார்ச் மாதம் 31-ம் திகதிக்குமுன்னரும்

2-ம் காலாண்டு வரி, யூன் மாதம் 30 ம் திகதிக்கு முன்னரும்

3-ம் காலாண்டு வரி, செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதிக்கு முன்னரும்

4-ம் காலாண்டு வரி, டிசெம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னரும் செலுத்தப்படல் வேண்டும்.

**விசேட கழிவு:**

(1) 1994 ம் ஆண்டின் 4 காலாண்டுகளுக்குமான தொகையை 31-01-1994 க்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்கட்கு 10 வீத கழிவு வழங்கப்படும்.

(2) 1994 ம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையை, காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துபவர்கட்கு 5 வீத கழிவு வழங்கப்படும்.

**தண்டம்:**

குறிப்பிட்ட காலத்துக்குள் வரி செலுத்தத் தவறுபவர்கட்கு.

(1) குடியிருப்பு, வெற்றுக்காணி ஆதனமெனில் 15 வீத தண்டமும்,

(2) வியாபார நோக்கத்திற்கான ஆதனமெனில் 20 வீத தண்டமும் அறவிடப்படும்.

**வரிவிலக்கு:**

சேதமடைந்துள்ள, காலியாகவுமுள்ள ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டு எழுத்து மூலம் விண்ணப்பங்கள் 31-01-94 க்கிடையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் ஒவ்வொரு வரியிறுப்பாளருக்கும் தனித்தனி அறிவித்தல் வழங்க முடியாத, தவிர்க்க முடியாத சூழ்நிலையிலுள்ளேன் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

எனவே, வரியிறுப்பாளர்கள் உரிய காலத்துக்குள் ஆதனவரியை நிலுவையின்றிச் செலுத்தி, நகர அபிவிருத்திக்கு உதவுமாறு மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ந. ஞானவேல்
செயலாளர்
நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
23-12-1993. (எ 3708)

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

பரியது கூர்ந்து
கோட்டது ஆயி
னும் யானை
வெரூ உம் புலிதாக்கு
றின்
- திருக்குறள்

# இலங்கை படையினரின் பலவீனங்கள் விடுதலைப் புலிகளால் அம்பலமாகிறது

## 'இந்தியா ருடே' விமர்சனம்

(புதுடில்லி)

தனது நெடுநாளைய விரோதியான புலிகளிடமிருந்து இலங்கை இராணுவம் பெற்றமிக மோசமான மிக அவமானகரமான தோல்வி பூநகரியில் இராணுவம் பெற்ற தோல்வி. இது அதன்சுயகௌரவத்திற்கு பலமான அடி கொடுத்திருப்பதோடு பாதுகாப்பு மற்றும் அரசியல் சார்ந்த அடிப்படை கேள்விகளையும் எழுப்புகிறது டி. பி.விஜயதுங்காவின் அரசு இக்கேள்விகளுக்கு பதில் தெரியாமல் திணறுகிறது.

இவ்வாறு 'இந்தியா ருடே' சஞ்சிகையில் 'இராணுவத்தின் பலவீனம் விடுதலைப் புலிகளால் அம்பலம்' எனும் தலைப்பில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கட்டுரை மேலும் கூறுவதாவது.

எனினும் இராணுவம் இன்று பழக்கப்பட்ட விதத்திலேயே நடந்துகொண்டது. பதிலடி கொடுப்பதாக நினைத்துக்கொண்டு விமானப்படை மூலம் வடபகுதியில் குண்டுகளை வீசி அட்டூழியம் புரிந்துள்ளது. கடந்த ஆண்டில் இருந்து புலிகளின் கைஓங்கி வரும் சூழ்நிலையில் அதற்கு ஏற்பட்ட பீதியையும்சங்கடத்தையும் காட்டுகிறது.

1990ல் அரசு-புலிகள் சமாதானப்பேச்சு முறிவடைந்த பின்னர் பூநகரி உட்பட ஆறு இராணுவதளங்கள் புலிகளின் தாக்குதலுக்கு இரையாகியுள்ளன. பூநகரியில் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டனர் மீதமிருந்தவர்கள் பல குழுக்களாக சிதறி ஓடிவிட்டனர்.

இருஆண்டுகளுக்குமேலாக இலங்கையில் இருந்த இந்தியப்படையின் மொத்த உயிரிழப்பில் பாதி பூநகரியில் இலங்கை இராணுவம் இழந்துள்ளது. இராணுவத்திற்கு பலத்த அடி கொடுத்து அவமானப்படுத்தியதோடு நிற்காமல் பூநகரிதளத்திலிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

யுத்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளத்தை தாக்கி அழித்துள்ள புலிகளின் செயல் அவர்களது அசாத்தியமான துணிச்சலுக்கும் மிகக் கவனமாக திட்டமிடும் திறனுக்கும் சான்றாக உள்ளது. இந்தத் திறமையில்தான் புலிகள் அமைப்பை உலகிலேயே மிக வெற்றிகரமான கெரில்லாப் படையாக ஆக்கியிருக்கின்றன. "சுட்டுவிட்டு ஓடும் சாதாரண தாக்குதல் இல்லை இது. இரு அணிகளின் மத்தியில் ஏற்படும் யுத்தம் போன்றது" என்கிறார் வடக்கில் போர் அனுபவம் உள்ள ஒரு இராணுவ அதிகாரி.

பூநகரியில் இருந்த கடற்படைப் பிரிவு நிர்மூலமாக்கப்பட்டு விட்ட நிலையில் பூநகரி தளத்தையே இனி கைவிட வேண்டி வரலாம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் கடற்படை பிரிவு இல்லாமல் யாழ்ப்பாணப் பகுதியை பாதுகாப்பதோ புலிகளைத் தடுத்து நிறுத்துவதோ சாத்தியமில்லை.

தளத்தின்மீது தாக்குதல் நடக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனாலும் பூநகரி தளத்தை காத்து வந்த இராணுவப்படை அசந்திருந்த சமயம் பார்த்து புலிகள் தாக்கியிருக்கிறார்கள். இது ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தை தருகிறது.

1992 ஆகஸ்டிலிருந்து இராணுவத்திற்கு நேர்ந்த பாதிப்புகளில் மிகக் கடுமையான பாதிப்பு இதுதான். 92 ஆகஸ்ட் வரையிலும் இராணுவத்தின் கை ஓங்கியிருந்தது. அப்போது யுத்த வியூகங்களில் நிபுணரான டென்ஸில் கொப்பேகடுவ வடக்கு பிரதேச இராணுவத் தளபதியாக இருந்தார். ஆனால் இவர் புலிகளினால் கொல்லப்பட்ட பின் களத்தின் நிலை அடியோடு மாறிவிட்டது.

தங்களது தோல்விக்கெல்லாம் பிரேமதாசாவின் தமிழர் ஆதரவுப் போக்குதான் காரணம் என்று முன்னர் இராணுவத் தலைமை கூறிவந்தது. அவர்கள் கேட்ட அதிகாரங்களையெல்லாம் தற்போதைய அதிபர் விஜயதுங்க அளித்துள்ள போதிலும் தோல்விகள் தொடர்கதையாகவே உள்ளன. இதற்கு என்ன காரணம் சொல்வது என்று தெரியாமல் இராணுவத் தலைமை திணறுகிறது.

"எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று இராணுவம் கூறும் கட்டுக்கதையை இனிமக்கள் நம்பப்போவதில்லை" என்று கூறுகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக. தற்போதைய அரசு தமிழர் போராட்டத்தை கடுமையான கண்ணோட்டத்துடன் அணுகுவதன் விளைவே பூநகரித் தாக்குதல் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

1992—93ல் இராணுவ பட்ஜெட்டிற்கு 1850 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 93—94ம் ஆண்டிற்கான இராணுவ பட்ஜெட் இதுவரை இருந்திராத அளவு 2,045 கோடி ரூபா இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட மறுநாள் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இலங்கையில் தற்போது உள்ளது இனப்பிரச்னை அல்ல; பயங்கரவாதிகள் பிரச்னை தான் என்று விஜயதுங்க திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார். பிரச்னையை இப்படி எளிமைப்படுத்துவதுடன் நில்லாமல் அனைத்து தமிழ் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி கிழக்கில் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தும் வேலையில் அவர் முனைந்துள்ளார்.

இது போதாதென்று கொழும்பில் புலிகளின் மனித வெடிகுண்டுகளைத் தேடுகிறோம் என்ற சாக்கில் பொலிசாரும், பாதுகாப்புப் படைகளும் நடத்தும் அதிரடிசோதனைகளும் சிறுபான்மையினரை மேலும் தனிமைப்படுத்திவிட்டன. -இ

## நமது நோக்கு

### தெற்கிலே புதிய அலையா?

இலங்கை அரசுக்கு எதிராகச் சர்வதேச மன்னிப்புச் சபையும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும் பலத்த பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

இராணுவ உதவிகளை இலங்கை அரசுக்குக் கொடுத்துவரும் நாடுகளுக்கும் இந்த அமைப்புகளின் அறிக்கைகள் செல்கின்றன.

ஜனநாயகத்தைப்பேணி வரும் நாடு இலங்கை என எண்ணிக் கொண்டிருக்கும் மேற்குலக நாடுகள் சற்றுக் கண் விழித்துள்ளன போலத் தெரிகிறது.

யாழ் பகுதியில் நடந்த குண்டு வீச்சுபற்றி வெளிநாட்டுத் தூதுவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

பீரங்கிப்படகு வழங்க பிரிட்டன் மறுப்புத் தெரிவித்துள்ளது. வெளிநாடுகள் விழித்துக் கொண்டன என்பதற்கு அறிகுறியா?

இதே போன்றுதான், கைக்குண்டுகளை விற்பதற்கான தடையை அவுஸ்திரேலியாவும் விதித்துள்ளது.

அவசரகால விதிகள் மூலம், அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசு தலையிட முயன்று வருகின்றது.

தமது உள்விவகாரங்களில் தலையிடும் முயற்சி இதுவென அவை பலத்த எதிர்ப்புகளைத் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில், மக்களின் கிளர்ச்சிகளை ஒடுக்கவே அவசரகால நிலைமைகளை நாடு முழுவதும் அரசு பிரகடனப் படுத்தியுள்ளது என லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுபோலத்தான் நவலங்கா சமசமாஜக்கட்சிப் பொதுச்செயலாளர் டாக்டர் விக்கிரமபாகுவும் கருத்துத் தெரிவித்தார்.

இந்தவேளையில், கடந்த பல வருடங்களாக அரசின் செயற்பாடுகளை ஆதரித்துத் தட்டிக் கொடுத்து வந்த பத்திரிகைகள், எதிர்ப்புச் செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளன; கண்டனக்குரலை எழுப்பியுள்ளன.

இவற்றின் குரல்வளையை நசிக்க அரசு அவசரகால விதிகளைப் பயன்படுத்த முயற்சிக்கின்றது.

தலைநகரில் 'சமாதானத்திற்கு வழி' என்ற தலைப்பில் சுதந்திரப் பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார்கள்.

இராணுவ பலத்தோடு தமிழர் உரிமைகளை அலட்சியப்படுத்திவிடலாம் என்ற அரசின் எண்ணம் புதிய அலையால் அடித்துச் செல்லப்படலாம்.

எனவே, அரசு விழித்துக் கொண்டு, தமிழர்கள் பற்றிய கொள்கையை மீள்பரிசீலனை செய்வது அவசியமாகின்றது.

## தங்கப் பதக்கம் வழங்கலும் மணிவாசகர் விழாவும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடாத்தும் 39வது ஆண்டு மணிவாசகர் விழா இன்று பி.ப. ஒரு மணிக்கு சித்தன்கேணி சிவன்கோவில் மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்றைய விழாவில் ஆசியுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து மணிவாசகர்சபை இம்முறை நடாத்திய சமயபாடப் பரீட்சையின் கீழ்ப்பிரிவில்முதற்தர சித்திபெற்ற தி. சுவிதா (ஆண்டு 4 தியாகராஜா ம. ம. வி.) மேற்பிரிவில் முதற்தர சித்திபெற்ற ப. சூரியராணி (ஆண்டு 11 தியாகராஜா ம. ம. வி.) ஆகியோருக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படும்.

மேலும் இப்பரீட்சையில் சித்தியெய்திய 47 மாணவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். -இ

## இராசிபலன்

28-12-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மார்கழி 13

பூரணை,வைகறை5-12வரை மிருகசீரிடம் பி.ப 4-48வரை இராகுகாலம் மாலை 3-25 முதல் 4-42 வரை; சுபநேரம் 10-58 முதல் 12-28 வரை பூரணை விரதம் சித்தயோகம்.

மேஷம்: வரவு பாராட்டு தொழில் சிறப்பு, வாக்குவசீகரம்.

இடபம்: உடல்சதி, மறதி தொழில்வேற்றுமை.

மிதுனம்: நல்லோர்சேர்க்கை விரும்பிய சுகம் பணவரவு.

கடகம்: எதிர்பாராதஉதவி துணிச்சல், பிறர் ஆலோசனை.

சிம்மம்: சோம்பல், வீண் செலவு, நிதானக்குறைவு.

கன்னி: நிர்ப்பந்தம் பயணத்தடை, மனப்போராட்டம்.

துலாம்: அதிகாரிகள் சந்திப்பு, காரியசித்திமன நிறைவு

விருச்சிகம்: குடும்ப மகிழ்ச்சி, புதியமுயற்சி நண்பர் வருகை:

தனுசு: வாக்கு வாதம் காரியத்தடை, சோம்பல்.

மகரம்: மனஸ்தாபம் மனக்கஷ்டம், பெரியோர் துன்பம்.

கும்பம்: இலாபம் உதவி உல்லாசம் தொழில்லாபம்.

மீனம்: வழியில் இடையூறு, பதட்டம் தெய்வபக்தி.

—ஜோஸ்யர்.

## இலவச மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். றோட்டறிக் கழகம் ஏழாலை மத்தி சனசமூக நிலையத்தின் ஆதரவோடு ஏழாலை வாழ் மக்களுக்கு ஓர் இலவச மருத்துவப் பரிசோதனை முகாமொன்றை இன்றுசெவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் அங்கு நடாத்தவுள்ளது.

பொதுமருத்துவப்பரிசோதனையும், கண் பரிசோதனையும் இம்முகாமில் மேற்கொள்ளப்படும். யாழ் போதனாவைத்தியசாலை கண் வைத்திய நிபுணர்கள் இப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

உழவும் தொழிலும் உனைக்காக்க
வளமாய் தேக்கு வருநீரை

உ

சிவமயம்

வண்ணை ஸ்ரீ
வாலாம்பிகா சமேத
வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்
(வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்)

திருவாதிரை —
ஆருத்திரா தரிசனம்

காலம்:- 29-12-1993

வைபவங்கள்:

அதிகாலை 2-00 மணி — திருவனந்தல்
அதிகாலை 2-10 மணி — திருப்பள்ளியெழுச்சி — பூசை
அதிகாலை 2-30 மணி — காலைச் சந்தி
அதிகாலை 3-00 மணி — நடேசா அபிஷேகம்

★ மங்கள இசை
தேவஸ்தான வித்துவான்கள்

★ உருத்திர பாராயணம்
சிவ ஸ்ரீ சோ. சுசிந்திரராஜன் அவர்கள்
சிவ ஸ்ரீ சோ. சுரேந்திர சர்மா அவர்கள்

★ திருவாசக பாராயணம்
"தமிழிசை அரசு", "சங்கீத பூஷணம்", "பண்ணிசைப் புலவர்"
நயினை நா. வி. மு. நவரத்தினம் அவர்கள்
(தலைவர், தமிழ் பண்ணிசைத் துறை, சிரேஷ்ட விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

அதிகாலை 5-30 மணி — வசந்த மண்டபப் பூசை

வை. கந்தப்பச் செட்டியார்
தர்மகர்த்தா

(ஏ-3712)

# தென்மாகாணசபை விவகாரம் தொடர்ந்தும் இழுபறிநிலையில்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் வரவு-செலவுத்திட்டத்தை எதிர்வரும் 31ம் திகதிக்கு முன் நிறைவேற்ற முடியாவிட்டால், அந்த மாகாணசபையைக் கலைத்துவிடும் விருப்பத்தை மாகாண ஆளுநர் டாக்டர் எல். எம் ஜயரத்ன முதலமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் கேட்டுள்ளார்.

தென்மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் இந்த மாகாண சபையை தொடர்ந்தும் நடத்துவதில் நிதி விரயம் ஏற்படும் எனவும் எனவே அதனைக் கலைத்துவிடுவதே நல்லதென ஆளுநர் முதல்வர் அமரசிறி தொடங்கொடவிடம் நேற்று தெரிவித்துள்ளார்.

எனினும் வரவுசெலவுத் திட்ட வாக்கெடுப்பில் தாம் வெற்றிபெற முடியுமெனவும் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் மாகாண சபை உறுப்பினர் பிரான்சிஸ்கூ என்பவரை ஒப்படைத்தால் அவரது வாக்கையும் வாக்கெடுப்பில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் திரு. தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் தென் மாகாண சபையில் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்கள் மாகாணசபை கலைக்கப்பட்டால் புதிய தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு அச்சம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் தென் மாகாணத்திலுள்ள ஐ. தே. க. அமைப்பாளர்களே மாகாணசபையை கலைக்க வேண்டாமெனவும் ஆட்சியை தம்மிடம் ஒப்படைக்குமாறும் ஆளுநருக்கு கடிதம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளனர். (இ)

# மருந்துகள் எதுவும் அனுப்பப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு இவ்வருட கடைசிக் காலாண்டுக்கான (4ம் காலாண்டு) மருந்துவகைகள் இதுவரை கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லை.

இந்த மருந்துவகைகளை கப்பல் மூலம் இங்கு கொண்டு வருவதற்கு திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு சென்றிருப்பதாகவும், கப்பலில் இடவசதி கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்த மருந்துகள் இங்கு கொண்டுவரப்படும் என்றும் அறியப்படுகின்றது. 72-இ

# அமைய எழுதுவினைஞர்க்கு நிரந்தர நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைய எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றும் 54 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் க. பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்புகொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாகவே இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 183-இ

# கிளிநொச்சி — கொழும்பு தபால் சேவை பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கொழும்பு தபால் சேவைகள் கடந்த பல வாரங்களாக நடைபெறவில்லை.

இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

தபால் பொதியுடன் கிளிநொச்சியில் இருந்து பல வாரங்களுக்கு முன்பு வவுனியா சென்ற கிளிநொச்சி செஞ்சிலுவை சங்கவாகனமும் கிளிநொச்சி திரும்பவில்லை என்றும் அறியப்படுகிறது.

(83-இ)

# கிளிநொச்சி காட்டுப் பகுதியில் பெண்ணின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள காட்டின் நடுவில் ஆறு ஒன்றில் உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் அடையாளம் காணாத சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி ஸ்தலத்தில் வைத்து மேற்கொண்டார்.

கிளிநொச்சி காவல்துறையினர் புலன் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர். (83-இ

# சார்க் விளையாட்டு போட்டியில் இந்தியாவுக்கு 1வது இடம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற 6வது சார்க் விளையாட்டுப் போட்டியில், இந்தியா முதலாவது இடத்தையும், பாகிஸ்தான் 2வது இடத்தையும், இலங்கை 3வது இடத்தையும் பெற்றன.

மேற்படி போட்டியில் பங்கு பற்றிய நாடுகள் பெற்ற பதக்கங்களின் விபரம் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இந்தியா | 61 | 47 | 38 |
| பாகிஸ்தான் | 23 | 22 | 21 |
| இலங்கை | 21 | 23 | 39 |
| பங்களாதேஷ் | 11 | 19 | 34 |
| நேபாளம் | 01 | 00 | 00 |
| பூட்டான் | 00 | 00 | 00 |
| மாலைதீவு | 00 | 00 | 00 |

வி-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், இலக்கம் 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number 2/16 336/B.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைத்துவத்துக்கு 40 பேரில் 30 பேரும் வர்த்தகத்துறைக்கு 58 பேரில் 42 பேரும், பௌதீகத்துறைக்கு 58பேரில் 9பேரும், கலைத்துறைக்கு 138 பேரில் 107பேரும் மாத்திரமே பதிவு செய்துள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. ம-இ

வாகரையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டுள்ளனர்.

படையினர் இப்பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பை அடுத்தே மேற்படி நான்கு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனராம்.

கொல்லப்பட்ட நான்கு தமிழர்களும் திருமணமானவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. க-இ

கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் கிளிநொச்சிப் பிரதேச செயலர் செல்வி நா இந்துமதி தெரிவித்தார்.

வடபகுதியில் பெரிய குளமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்ததைத் தொடர்ந்து, குளத்தின் அவசர வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால் கண்டாவளை, வட்டக்கச்சி, முரசுமோட்டைப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 83-இ

படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு முடப்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் தலைவர், செயலாளர் உட்பட நான்கு முக்கியஸ்தர்கள் புலனாய்வுத்துறையினரால் கொழும்பில் காரணம் ஏதுமின்றி கைது செய்யப்பட்டதனையடுத்தே மேற்படி நிலைமை உருவாகியுள்ளதாம்.

இது தொடர்பாக வன்னிப் பிரதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அறிக்கை ஒன்றையும் அரசுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சிப் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவரும் அவர் பயணம் செய்த அம்புலன்ஸ் வண்டி மற்றும் சாரதியும் வவுனியாவில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சியில் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# தபால் பொதிகள் பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன

(கோப்பாய்)

யாழ் குடாநாட்டுக் தபால் பொதிகள், நேற்று பிரதம தபாலகத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பொதிகளை நேற்றுக் கொழும்பு புறப்படவிருந்த கப்பலில் அனுப்பிவைக்க ஏற்பாடாகியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

# லலித் ஆதரவாளர்கள் புதிய கட்சி ஆரம்பிப்பர்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள லலித் அத்துலத்முதலியின் ஆதரவாளர்கள் புதிய கட்சியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நாடுபூராவும் உள்ள லலித் ஆதரவாளர்களும் அவரது மனைவி திருமதி ஸ்ரீமணி அத்துலத்முதலியும் அண்மையில் இதுபற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு இந்த புதிய கட்சி ஆரம்பிக்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ம-சி

வெள்ளத்தினால்

# வட மத்திய மாகாணத்தில் 2 ஆயிரம் குடும்பம் பாதிப்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் கடந்த சில நாட்களாகத் தொடரும் பெரும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சுமார் 2,000 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொலநறுவை புனகபிரதநிலையத்தில் தஞ்சமடைந்துள்ளன.

இப்பகுதியில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், வெளியிடங்களுடனான தொடர்புகள் எதுவுமின்றி அவை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. ம-இ

காங்கிரஸிலிருந்து

# வாழப்பாடியை நீக்க அமைச்சர்கள் கோரிக்கை

(சென்னை)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், மற்றும் உறுப்பினர்களையும் நீக்கிவிட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டுமென்று மத்திய துணை அமைச்சர்களான அருணாசலம், தங்கபாலு ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்கள் பிரதமர் நரசிம்மராவை புதுடில்லியில் சந்தித்தே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர். (ம-ரி)

லயனல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளையில் இப்பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் முயற்சியில் மட்டு. மாவட்ட செயலர் ஜி. மௌனகுருசாமி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். (ஏ-இ)

வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இதேவேளை, இத்தேர்தல்கள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிக்கையில்; தேர்தல்களை நடாத்தக் கூடிய சூழ்நிலை தற்போது கிழக்கு மாகாணத்தில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. கி-இ

தொடர்ந்தும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் உயரலாமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் 136. 1 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, வாழைச்சேனை, வாகரை, வவுணதீவு, செங்கலடி, பட்டிப்பளை ஆகிய பகுதிகளில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

மேலும் தாழ் நிலப்பகுதிகளான புதூர், இருதயபுரம், வவுணதீவு, கூழாவடி, காமாங்கம் ஆகிய பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (க-இ)

# கிளின்டன் ரஷ்யா விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் அடுத்த வருடம் தை மாதம் 12ம் திகதி முதல் 14ம் திகதி வரை ரஷ்யாவுக்கு விஜயம் செய்ய இருப்பதாக, வெள்ளை மாளிகை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது —வி

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய ஆட்டத்தில் 'பி' பிரிவில் பாடும்மீன் எதிர் சென்-நீக்கிலஸ் அணியும் 'ஏ' பிரிவில் ஞேயல் எதிர்ஸ்கந்தாவும் மோதவுள்ளன. (ஸ)

வட-கிழக்கு பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான ஆலோசனைகளை டக்ளஸ் செய்யும்படியும், இக்கலந்துரையாடலில் ஏனைய எதிர்க்கட்சிகளும் கலந்து கொள்வதற்குத் தயாராக இருப்பதாகவும் திருமதி ஸ்ரிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியின் செயலருக்கு எழுதிய விரிவான கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-இ